
# நினைவுகள் பகிர்ந்து

# பணி நிறைவு வாழ்த்து!

## திரு மு. ஜெயசங்கர் IRS

**நாள்: 30-07-2021**



சென்னையே வாழ்க்கை யென்று,
சிந்தையை மனத்தில் தேக்கி,
மன்னிய பெருமை கொள்ளும்;
மருவிலா அன்பின் பயணம்!
சென்னையில் சுங்கத் துறையுள்
செவ்விய பணியும் கொண்டு,
மின்னிடும் விமானச் சரக்ககம்,
மீட்டிய உறவின் கோட்டம்!

நேற்றெனப் பணியில் சேர்ந்து,
நினைவு கொள்ளும் முன்னம்,
மாற்றமில் நினைவாய்ச் சுமக்க,
மறுநாள் வெடித்த குண்டு!
சீற்றமாய் ,பலரும் நோக்க,
சிந்தையில் என்னைக் கண்டு,
ஆற்றலால் அனைத்துச் சேர்த்த,
பாஷா ஜெயசங்கராவார்!

-வேறு-

தப்பாமல் நினைவில் தேங்கும் மீனம்பாக்கம்!
எப்போதும் ஜெயசங்கரின் தாயகம் போலும்,
அப்பப்பா அவனது பணி மிகுதியாய் அங்கு!
இப்படிப் பலநாள் இயைந்து நடக்கையில்,

ஒப்பிலா உறவுகள் சில உவந்து பெற்றான்!
அப்படியாக அன்பில்சீர் மங்களா டேனியல்,
தப்பிலா அன்பில் தமக்கையாய் ஜீனத்!
ஒப்பிலா உறவுகள் இன்னும் உண்டு!

பல்லாவரம் புகழ் தனசேகரன், பக்குவமாய்,
நல்லசீர் கதை சொல்லும் தாமோதரன்,
நலம்சேர் பரமேஸ்வர அய்யர், சீர்மிகு
சீலர் செந்தாமரைக் கண்ணன் பின்

கெழுதகை அன்பில் சீர் கண்ணதாசன்,
விழுமிய அன்பில் தமிழ்வேந்தன் எனவுமாய்,
வழுவாசீர் கொண்டு சிவசங்கரன், காந்திதாஸ்,
அமரர் காந்தி ,சென்னையின் வேந்தன்

சேகாட் சினிவாசன், முரளிதரன் எனவாய்,
அற்றைநாள் நினவில் சசிகலா தயாநிதி,
அடுத்து விஜயலஷ்மி, மினாட்சி எனவும்
அன்பால் அவனுடன் அணைந்து நடக்க,
தொடுத்த நட்பின் தொகைகள் வளரும்!

-வேறு-

ஓட்டமும் நடையும் கொண்டு,
ஒவ்வொரு நாளும்சுற்றிவந்திட,
ஆட்டமும் பாட்டமும் ஓராண்டு
அடுத்து நான் சுங்க இல்லம்!
வாட்டமில் நட்புக்கங்கே வகையாய்
காரைக்கால் கலிய மூர்த்தி!
நீட்டிய உறவில் வந்தார்,
தென்றல் சின்னச் சாமி!

ஆட்டச் சீர் நாயகராய் செய்யாறு
கார்த்தி ,பன்னீர் செல்வம்
நாட்டுகோட்டை நாயகன்,பீட்டிராவ்,
விசுவோடு இரவிச்சந்திரன்,
காட்டிய அன்பின் நலமுடன்
இணைந்த துரைப்பாண்டியன்
தீட்டிய அன்பின் கேள்வன்
இரகுசெல்வம் எனப் பலருமாக,

நாட்டியச் சீராய் நிலைத்தது,
தமிழாலும் சுங்க இல்லம் எனத்
தீட்டிடச் செய்தவன் ஜெயசங்கர்,
திகழுமாம் அவன் பெயரென்றுமே!
கோட்டை அன்பின் இரவிக்குமார்,
கொள்கைசீர் கிரிபிரசாத், வுடன்,
கொட்டிய சீர் காலமான ரமணி
சுங்க முரசில் உன்னியோடும்,

கூட்டிய அன்பால் நிறைந்த,
கமலக்கண்ணன் கோயிந்தன்
தீட்டிய நல்அரிய நட்பில்;
கனிவுடை கீதாக்கள் நளினியாக!
மூட்டிய அன்பில் அவனுடன்
முகிழ்ந்தார் அனுசுயா நீலவேணி!
நீட்டிடயோர் பட்டியல் ஆகும்
நினைவுகள் யாவும் பதிந்தால்!

--வேறு--

மாற்றமில் நினைவுகளை மனத்தில் அசைபோட,
ஆற்றலாய் அவனது பயணம் முப்பத்தி எட்டாண்டு,
தோற்காது நினைவைச் சூட ,உதவி ஆணையராக
தோற்றமும் பொலிவுமாக துணைவரக் கண்டோம்!

காற்றும் கூட கனத்துச் சொல்லும் எங்கள் நட்பை!
மாற்றமாய்ப் புதுமைச் சூட பணியின் நிறைவு!
தோற்காது வாழ்வை நகர்த்தும் எங்கள் கோமான்,
தெள்ளிய அன்பின் மக்கள் இருவர் பவி, நிவி யென,

அள்ளக் குறையாத அன்புடன் பெயரன் பெயர்த்தி,
இல்லாள் தானும் இயைந்து நடக்க ,எங்கள் நட்பும்
தள்ளாது தொடரும் ,தகைவுடன் நிறைந்தே!
திண்ணமாய் பொழுதெலாம் அன்பில் தோய,

வண்ணமாய் வாழ்வான் நாளும் தொடர்ந்தே!
எண்ணத்தில் யாவரும் வேண்டும் எனவாயவன்
இயம்பிட யானும் சேர்த்தேன் பெயர்களையே!
இளையர் சிலரும் இடையில்நினைவில் உண்டு,

சங்கீதா ,ரேணுகா, அவர்தம் உமா எனவாய்,
நீளும் பட்டியல் என மனத்தில் தொன்றிட ,
தயக்கமின்றிச் சொல்வேன் விடுபட்டப் பெயர்கள்,
விருப்பாலும்மில்லை! வெறுப்பாலுமில்லை!

நினவில் நீந்தும் நித்திலப் பூக்கள் அவர்கள்!
அனைவருக்கும் நட்போடு நன்றி பகர்ந்தோம்!
மனையாய் எங்களைச் சுங்க இல்லம்
மருவின்றி அனைத்ததாம் காலம்தன்னை,
நினைவில் போற்றும் நெகிழ்ச்சியால் வாழ்த்து,
நண்பர்கள் சார்பில் ,நலமுடன் உரைத்தேன்!

- கு.ப. அசோகன்,

30-07-2021

